## வினா எண் :: 6.1.3.1.A

இந்திய எண்முறையில் எண்ணுருக்கள் எவ்வாறு எண்ணிலும் எழுத்திலும் குறிப்பிடப்படுகின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்கவும்.

## ஆழ்மனதில் கொள்க

பாரம்பரியம் மிக்க பாரதத்தில் பழமையாக இருந்துவரும், எண்ணுருக்களை குறிப்பிடும் முறையைத்தான் **இந்திய எண் முறை** என்று குறிப்பிடுகிறோம்.

உதாரணமாக, 3 என்ற எண்ணுருவை நாம் இந்திய எண் முறைப்படி கீழ்கண்டவாறு, எழுதவும் சொல்லவும் செய்கிறோம்.

மூன்று

9 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

ஒன்பது

27 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

இருபத்து ஏழு

84 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

எண்பத்து நான்கு

475 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

நானூற்று எழுபத்து ஐந்து

731 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

எழு நூற்று முப்பத்து ஒன்று

1,384 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

ஆயிரத்து முன்னூற்று எண்பத்து நான்கு

5,978 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

ஐயாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து எட்டு

40,693 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

நாற்பதாயிரத்து அறு நூற்று தொண்ணூற்று மூன்று

81,312 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

எண்பத்தோராயிரத்து முன்னூற்று பன்னிரண்டு

6,23,579 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

ஆறு இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து ஐநூற்று எழுபத்து ஒன்பது

58,43,261 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

ஐம்பத்து எட்டு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்று

1,65,27,819 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

ஒரு கோடியே அறுபத்து ஐந்து இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து எண்ணூற்று பத்தொன்பது

36,73,61,548 என்ற எண்ணுரு இந்திய எண் முறைப்படி எழுத்து வடிவில் . . . .

முப்பத்து ஆறு கோடியே எழுபத்து மூன்று இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து ஐநூற்று நாற்பத்து எட்டு

Sum & solution prepared on Thursday 6th May, 2021 :: 06:54 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.